திரு. அ. தேவேந்திரன் : எல்லாப் பிரச்னைகளையும் விரைவாக தீர்த்திடும் நமது அரசு நீண்ட நெடுங்காலமாக தீர்க்கப்படாமல் இருக்கிற இந்த ஹோட்டல் தொழிலாளர்கள் பிரச்னையை விரைவாகத் தீர்க்குமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஹோட்டல் தொழிலாளர்கள் குறைந்தபட்ச ஊதியம் பற்றி அதற்கான அட்டவணையைக் கொடுப்பதில் காலதாமதம் இருந்தது. அது இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே பிரச்னை விரைவில் தீர்க்கப்படும்.

திரு. மு. சுருளிவேல் : நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் டெல்லியில் நடைபெற்ற முதல் அமைச்சர்கள் மாநாட்டில் our first step is to demolish monopoly houses என்று கூறினார்கள். அதேபோல் தென் பாண்டி மண்டலத்தில்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினு, ஹோட்டல் தொழிலாளர்களைப் பற்றியது. நேரடியாகக் கேள்வி கேளுங்கள். அதற்கு முன்னுரை வேண்டாம். ஹோட்டலுக்கு வாருங்கள் நேராக.

திரு. மு. சுருளிவேல் : பஸ்களைத் தேசியமயமாக்கும் முற்போக்குக் கொள்கையினை கடைப்பிடித்தார்கள் நம் அரசினர். இன்று இந்த நாட்டிலுள்ள முதலாளி வர்க்கத்தில் அங்கம் வகிக்கக்கூடிய ஓட்டல் அதிபர்கள் அவ்வளவு பலஹீனமான நிலையில் இல்லை. எவ்வளவோ கன்சீலியேஷன் தீர்ப்புகளை அவர்கள் தூக்கி எறிந்திருக்கிறார்கள். எவ்வளவோ தீர்ப்புக்களை அவர்கள் அலட்சியப்படுத்தியிருக்கிறார்கள். எனவே, இப்படி ஒரு குழு அமைக்கும்போது அதன் தீர்ப்புக்களை அமல்படுத்த உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினர் அவர்களின் வேண்டுகோள் நினைவில் வைத்துக்கொள்ளப்பட்டு தக்க சமயத்தில் ஆவன செய்யப்படும்.

மத்திய அரசுத் தேர்வுகளுக்கான பயிற்சி நிலையம்

* 192 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., போன்ற மத்திய அரசுப் பணிகளுக்கு பயிற்சி அளிக்கும் நிலையத்திற்கு தேவையான தாழ்த்தப்பட்ட, மலைவாசி மாணவர்கள் முன் வருவதில்லை என்பது உண்மையா ?

1972 டிசம்பர் 15]

(இ) ஆம் எனில், அதற்குரிய காரணம் யாது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 3 ஆண்டு பட்டப்படிப்பு ஒரு ஆண்டு பயிற்சிக்கும் பிறகு இந்திய ஆட்சி மற்றும் காவல் பணிகளில் வேலே கிடைக்கும் என்று உறுதி இல்லாத காரணத்தாலும், பரவிவரும் வேலே இன்மை காரணத்தாலும், அரிசன மாணவர்கள் உடனடியாக வேலேயில் அமர ஆர்வமாக இருப்பதாலும், பயிற்சி நிலேயத்திற்கு அரிசன மாணவர்கள் வர விரும்புவதில்லே என கருதப்படுகின்றது. தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் மலேவாழ் இனத்தைச் சார்ந்த பட்டதாரி மாணவர்கள் தகுந்த எண்ணிக்கை கிடையாது. பெரும் விளம்பரங்கள் செய்தபோதிலும் பிற மாநிலங்களில் இருந்து மாணவர்கள் வராமைக்கு காரணம் தெரியவில்லே.

திரு. வை. பாலசுந்தரம் : ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். பயிற்சி நிலேயங்களில் 1967-ல் இருந்து எவ்வளவு மாணவர்கள் பயிற்சி பெற்ருர்கள்? அதில் எவ்வளவு மாணவர்கள் தேறிஞர்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1966–67-ல் சேர்ந்த மாணவர்கள் 42, தேர்வு எழுதியவர்கள் 42, ஆனல் ஒருவருக்கும் வேலேவாய்ப்பு அளிக்கப்படவில்லே. 1967–68-ல் சேர்ந்த மாணவர்கள் 38, தேர்வு எழுதியவர்கள் 34, போட்டிக்குத் தகுதியானவர்கள் இந்திய ஆட்சிப் பணிக்கு 6 பேர், காவல் பணிக்கு 3 பேர், வேலே வாய்ப்பு ஒருவருக்குத்தான் கொடுக்கப்பட்டது. 1968–69-ல் சேர்ந்தவர்கள் 27, எழுதியவர்கள் 27, அதில் ஆட்சிப் பணிக்கு ஒருவரும், காவல் பணிக்கு ஒருவரும் தேர்வு பெற்ருர்கள். ஒருவருக்கு மட்டும் ஆட்சிப் பணியில் வேலே கொடுக்கப்பட்டது. 1969–70-ல் சேர்ந்தவர்கள் 23, எழுதியவர்கள் 23, இரண்டு பேர் ஆட்சிப் பணிக்குத் தேர்வு பெற்ருர்கள், ஒருவருக்குத்தான் வேலே கொடுக்கப்பட்டது. 1970–71-ல் சேர்ந்தவர்கள் 25, எழுதியவர்கள் 25, அதில் இருவருக்கு வேலே கொடுக்கப்பட்டது. 1971-க்குப் பிறகு ஏழு பேர்களுக்கு வேலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. செபமாலே : ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்றவற்றிற்கு அதிகப்படியான ஹரிஜன மாணவர்கள் பயிற்சிபெற வராததற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் ஏற்கனவே முதலில் பதில் சொன்னேன். பட்டதாரிகளாக இருக்கிற ஹரிஜன மாணவர்கள் ஓரளவிற்குப் பட்டம் பெற்றுவிட்ட பிறகு வேறு வேலை தேடிக் கொண்டு செல்வதில்தான் ஆர்வம் காட்டுகிறார்களே தவிர மேற்கொண்டு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பரீட்சைகள் எழுதுவதில் ஆர்வம் காட்டுவதில்லை. எனவேதான் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இருந்தாலும் அவர்களை ஊக்குவித்து அதிகப்படியானவர்களைக் கொண்டுவர முயற்சிக்கிறோம்.

Housing schemes for Harijans in Sanarapatty Union area

* 193 *Q.*—THIRU K. NAGARAJAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the stage of the proposal to construct housing colonies to Harijans at Andipatti and Narivilapatti of Sanarapatty Panchayat Union, Dindigul taluk, Madurai district?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதுபோன்ற திட்டம் ஒன்றும் அரசு மட்டத்தில் நிலுவையில் இல்லை.

திரு. க. நாகராஜன் : இந்தத் திட்டத்திற்கான வேண்டுகோள் பல நாட்களுக்கு முன்பாகவே கேட்கப்பட்டிருக்கிறது. எனவே ஏழை ஹரிஜனங்களுக்கு அப் பகுதியில் இத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஆண்டிப்பட்டிக் கிராமத்தில் ஹரிஜனங்கள் இல்லை என்று விவரம் இருக்கிறது. ஆனால் நரிவிலாப்பட்டியில் கிட்டத்தட்ட இருபது வீடுகள் இருக்கின்றன. அதில் 12 பேர்கள் போக எட்டு பேர்களுக்கு வீட்டு மனை இல்லை. அந்த எட்டு பேர்களுக்கும் வீட்டு மனை கொடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது.

அன்னப்பநாயக்கன் குப்பத்தில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட வீடுகள்

* 194 *வினா.*—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டி துணை வட்டம், அன்னப்பநாயக்கன் குப்பம் காலனியில் 1—4—1972-ல் எரிந்துபோன 80 வீடுகளை மானியத் தொகையுடன் புதுப்பித்துக் கட்டும் திட்டம் எப்பொழுது முடிவடையும் ?